இதழ் 28

சூன் 2019

# உருமு தனலெட்சுமி கல்லூரி
# நமது வளாகம் – செய்திமடல்






நம் நினைவிலே என்றும் நிறைந்திருந்து, தோன்றாத் துணையாய் நமது செயல்பாடுகளை வழிநடத்திச் செல்லும் கல்லூரி நிறுவனர் அவர்களின் நல்லாசிகளுடன், பொன்விழாவைக் கொண்டாட விருக்கும் சிறப்பு வாய்ந்த புதியதோர் கல்வியாண்டில் நாம் அடியெடுத்து வைத்துள்ளோம். இக்கல்லூரிச் சோலையினைத் தேடிவந்து கற்று மகிழக் காத்திருக்கும் இளைய பறவைகளை வரவேற்கும் புதியோர் வரவேற்பு விழா, அவர்களது ஆங்கில அறிவு மேம்பாட்டிற்காக நடைபெற்ற சிறப்புப் பயிற்சி, ஆறறிவு பெற்ற மனிதனை விலங்கினும் கீழான நிலைக்குத் தள்ளும் குடி போதையை ஒழிப்பதற்கான போதை எதிர்ப்புத் தின விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை மற்றும் பேரணி, தொழில் பற்றிய அரசுத் திட்டங்கள் குறித்த கருத்தரங்கம் எனப்பல செய்திகளைத் தாங்கி வருகிறது இந்தச் செய்திமடல்...

– வாழ்த்துகளுடன், ஆசிரியர் குழு.

## போதை எதிர்ப்பு தின விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை







நமது கல்லூரியின் சமூகப்பணித் துறையும், சன்ரைஸ், ஒருங்கிணைந்த குடிபோதை மாற்று மறுவாழ்வு மையமும் இணைந்து நடத்திய அகில உலக போதை எதிர்ப்பு தின விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை 26.06.2019 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு A.V. அரங்கில் நடைபெற்றது. முதல்வர் முனைவர் E.R. இரவிச்சந்திரன் மற்றும் சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி ஆகியோர் தலைமையில் சன்ரைஸ் அறக்கட்டளையின் இயக்குநர் திரு. M.S. சண்முகம் மற்றும் சமூகப்பணித் துறையின் தலைவர் திருமதி K. ரேணுகாதேவி ஆகியோர் முன்னிலை வகிக்க சிறப்பு விருந்தினர் Dr. S.R. நிர்மல், Head, Dept. of Psychiatry, Dhanalakshmi Srinivasan Medical College, Perambalur அவர்கள் உரையாற்றினார்.

## புதியோர் வரவேற்பு விழா













நம் கல்லூரியில் இந்தக் கல்வியாண்டில் சேர்க்கை பெற்ற மாணவர்கள் அனைவரையும் வரவேற்கும் நிகழ்வாக, 'புதியோர் வரவேற்பு விழா' 21.06.2019 அன்று காலை 10 மணிக்கு அம்புஜம் அம்மாள் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரித் தலைவர் பத்மா இராமகிருஷ்ணன் தலைமை வகிக்க, கல்லூரிச் செயலர் திரு. கல்கி இராமகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். முதல்வர் முனைவர் E.R. இரவிச்சந்திரன் கல்லூரியின் செயல்பாடுகளை விளக்கினார். கல்லூரிச் சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி துறைத்தலைவர்களை அறிமுகப்படுத்தினார். சிறப்பு விருந்தினராக நகைச்சுவை இமயம் புலவர் இரா. சண்முக வடிவேலு கலந்து கொண்டார். உருமு தனலெட்சுமி வித்யாலயாவின் முன்னாள் தமிழாசிரியர் புலவர் இரா. மாது நம் நிறுவனர் உருமு சேஷாசலம் செட்டியாரின் தன்னலமற்ற தியாக உணர்வை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

## தொழில் வாய்ப்புகள் மற்றும் அரசுத் திட்டங்கள் குறித்த கருத்தரங்கம்



பாரதிதாசன் மகளிரியல் துறை சார்பாக, தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் சங்கம் எற்பாடு செய்த மகளிர் மற்றும் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகள் மற்றும் அரசுத் திட்டங்கள் குறித்த கருத்தரங்கம் 28.06.2019, 29.06.2019 ஆகிய இரு நாட்கள் ஜமால் முகம்மது கல்லூரியில் நடைபெற்றது. நம் கல்லூரியிலிருந்து சுமார் 40 மாணவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் வங்கி மேலாண்மையியல் துறையின் மூன்றாமாண்டு மாணவர் உமாமகேஸ்வரன் சிறப்பு விருந்தினரிடம் பங்கேற்புச் சான்றிதழ் பெறுகிறார்.

## Bridge Intensive Course









The Bridge Intensive Course in English for the academic year 2019 - 2020, was organized between 24.06.2019 to 28.06.2019 for all the first year UG Students. The Inaugural address was given by eminent Chief Guest Prof. S.M.P.Thangapandian, former Head, Department of English, Govt. Arts College, Trichy. He focused on mischief as a centre of Entertainment in human life. Further this session was coloured by Dr. D. Christy Selvarani, Director of SFC and Principal Dr. E.R. Ravichandran who had pointed out Globalization of English Language. The Valediction of this Course was addressed by Dr. T. Jayakumar, Associate Professor of English, Periyar EVR College, Trichy. He Suggested various tricks to enhance the Language in this present situation.

## விழிப்புணர்வுப் பேரணி

நம் சமூகப்பணித் துறையும் குடிபோதை விழிப்புணர்வு ஆலோசனை மற்றும் மீட்பு மையமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வுப் பேரணி 26.06.2019 அன்று காலை 9.30 மணியிலிருந்து 11.30 மணிவரை நடைபெற்றது. நம் கல்லூரி மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் குடிப்பழக்கத்திலிருந்து மீள்வதற்கும் அதற்கான சிகிச்சை முறை போன்றவற்றையும் துண்டு பிரசுரமாக மாணவர்கள் வழங்கினர். இந்நிகழ்ச்சியினைச் சமுகப்பணித் துறை உதவிப் பேராசிரியர் திரு. A. விஜய்கிருஷ்ணன் வழிநடத்தினார்.





